DEPOSITION OF WITNESS

-----

IN THE COURT OF PRINCIPAL JUDGE, CHENNAI

**LAOP 204/2023 - PW2**

Name : S.Haridass Reddy,

Father Name : V.K.Sankara Reddy,

Age : 55

Address : Residing at No.16/24, Reddy Street, Virugambakkam, Chennai-92.

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 5th day of August, 2025.

---

**Cross Examination :**

1. பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். ம.சா.ஆ.17 எந்த நோக்கத்திற்காக இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என் தந்தைக்குபிறகு யாராவது ஒருவர் அவர் பார்த்து வந்த நிர்வாகத்தை பார்க்க வேண்டும் என்பதற்காக. ம.சா.ஆ.17 சொத்து சம்மந்தப்பட்ட ஆவணம் என்பதால் அது பதிவு செய்யப்பட்ட ஆவணமாக இருக்கவேண்டும் என்றால் சரிதாதன். ம.சா.ஆ.17 பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான்.

2. ம.சா.ஆ.17 கையொப்பமிட்டுள்ள நபர்கள் வெவ்வேறு முகவரியில் இருக்கிறார்கள் என்றால் சரிதான். அவர்கள் பத்திரம் வாங்கிய 13.02.2014ம் தேதிக்கு பிறகு இரண்டு மூன்று நாட்கள் கழித்துத்தான் கையொப்பம் இட்டுள்ளார்கள். பத்திரம் 13.02.2014 அன்று தட்டச்சு செய்யப்பட்டது. ஆவணம் 13.02.2014 அன்று தயாரிக்கப்பட்டு கையொப்பம் இடப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.17 ஆவணம் இவ்வழக்கிற்காக தயாரித்து தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

3. நில எடுப்பிற்கு உள்ளான சொத்தின் கூட்டு சுவாதீனத்தில் நாங்கள் இருந்தோம் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நில எடுப்பிற்கு உள்ளான இடத்தில் உள்ள கோவில் பொதுக்கோவில் என்றாலும் அது பொதுமக்களின் பங்களிப்பினால் நிறுவகிக்கப்பட்டு வருகிறது என்றாலும் எங்கள் குடும்பத்திற்கு அது தனிப்பட்ட சொத்து இல்லை என்றாலும் சரியல்ல.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence, admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |